## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.

## CC. No. 07/2017

**2025**–ம் ஆண்டு ஜீலை மாதம் 09–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி–5(PW–5)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகதீசன் | தொழில் | : | விவசாயம் |
| த/பெ. | : | தங்கராஜ் | ஊர் | : | சித்திரக்குடி |
| வயது | : | 61 | மாவட்டம் | : | தஞ்சாவூர் |

**09.07.2025**

**1வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 4வது எதிரி இறப்பு.**

**முதல் விசாரணை :**

1) நான் சித்திரக்குடியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியையும் மற்ற எதிரியையும் தெரியும். 4வது எதிரி இறந்துவிட்டார். அ.சா–1 யை தெரியும் அனைவரும் எனது ஊர்காரர்கள்.

2) கடந்த 2014 ஆம் ஆண்டு காலை சுமார் 11.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்து வந்துகொண்டிருந்தபோது அ.சா.1 க்கும் 1வது எதிரிக்கும் இடையே சண்டை நடக்கும் சத்தம் கேட்டு நான் சென்று விலக்கிவிட்டேன். அந்த தகறாரில் அ.சா.2 க்கு தலையில் அடிப்பட்டிருந்தது. யார் தாக்கினார் என்று எனக்கு தெரியாது. அ.சா.2–யை தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு நான் சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

30.11.2014 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் அ.சா.1, 2 யை தகாத வார்த்தையார் திட்டி, கட்டையால் அடித்து கொலைமிரட்டல் விட்டதை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. அதை நான் நேரடியாக பார்த்ததாக போலீசார் விசாணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.2 தற்போது உயிருடன் இல்லை. இறந்துவிட்டார்.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை என பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது,

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**<u>CC. No. 07/2017</u>**

**2025**–ம் ஆண்டு ஜீலை மாதம் 09–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி–3(PW–3)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபிநாத் | தொழில் | : | விவசாயம் |
| த/பெ. | : | இராமமூர்த்தி | ஊர் | : | சித்திரக்குடி |
| வயது | : | | மாவட்டம் | : | தஞ்சாவூர் |

**<u>09.07.2025</u>**

**<u>1வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 4வது எதிரி இறப்பு.</u>**

**<u>(M.P No.1/2025–ன் 02.08.2022 தேதிய உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்)</u>**

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1) எனக்கும் 1வது எதிரிக்கும் இடையே இடப்பிரட்சனை இருந்தது என்றால் சரிதான். அந்த பிரட்சனைக்குறிய இடம் யார்க்கு சொந்தம் உடையது என்று சர்வேயர் வைத்து அளவீடு செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்தோம். சர்வேயர் அளவீடு செய்ய இருந்ததாகவும், ஆனால் அளவீடு செய்யவில்லை என்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நாளது தேதிவரை அந்த இடத்தை சர்வேயர் வைத்து அளவீடு செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பிரட்சனைக்குறிய இடத்தில் தான் மரக்கன்றுகள் நட்டேன் என்றால் சரிதான்.

2) யாருக்கு உரிமையானது என்று முடிவு செய்யாத இடத்தில் மரக்கன்று நட்டது தவறு என்றால் சரிதான். 30.11.2014 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு என் தகப்பனார் ராமமூரத்தியும், எழிழரசனும் நானும் தினேஷ், நாகசுந்தரம், சுரேஷ், கோவிந்தராஜ், ஆகியோருக்கு எதிராக 1வது எதிரியால் தாக்கல் செய்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு எதிரிகளுக்கு காயம் ஏற்பட்டு எதிரிகள் சிகிச்சையில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் இடத்தில் மரக்கன்று நடக்கூடாது என்று 1 வது எதிரி தரப்பில் தடுத்தால் பிரட்சனை ஏற்பட்டுதான் அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3) காயம்பட்டவுடன் நான் நேரடியாக அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வேறு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுவிட்டுதான் அரசு மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் அரசு ஆரம்ப சுகாதரநிலையத்தில் முதல் உதவி பெற்றுவிட்டு

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரிக்கு சென்றேன். 1வது எதிரி என்னை அரிவாளால் வெட்டியதாக மருத்துவரிடம் சொன்னேனா என்றால் ஆமாம். அரிவாள்ளால்தான் வெட்டினார். எதிரிகனை தாக்கிய வழக்கில் நான் தேடப்பட்டதால் மருத்துவமனையில் இருந்து தலைமறைவு ஆகிவிட்டேன் என்றால் இல்லை. மருத்துவர் சொல்லிதான் டிச்சார்ச் ஆனேன்.

4) முறைகேடாக எதிரிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து, அதை தட்டிக்கேட்ட எதிரிகளை தாக்கி காயம்படுத்திவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்துகொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு வேறு வகையில் ஏற்பட்ட காயங்களை வழக்கிற்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனது தாயர் ராஜேஷ்வரி இறந்துவிட்டார்.

**மறு விசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./-எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.